தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 02-06-2018 ஆண்டு:- பத்தாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்!

## தமிழ் இலக்கியப்புதையல்

காலத்தால் மூத்த மொழிகளில் நம் தமிழ் மொழியும் ஒன்று. செம்மொழி அந்தஸ்துப் பெற்றுச் செழுமை பூண்டமொழி நம்மொழி. இன்றைய நவீன உலகுக்குக் கிடைத்துள்ள மிகப்பழைமையான இலக்கியம் நம்முடைய தொல்காப்பியமே. ஆம். பழந்தமிழரின் நாகரிகம், வாழ்க்கைமுறை, மொழிவளர்ச்சி, தமிழ் இலக்கணம் என்பவற்றுக்குச் சான்றாக விளங்கும் நூலும் அதுவே.

சங்ககாலம் முதல் இன்றுவரை தோற்றம் பெற்ற தமிழ் இலக்கியங்கள் எமக்குப் பெரும்புதையல் ஆகும். இப்பெரும் இலக்கியப்புதையலை முதுசமாகப் பெற்றவர்கள் நாங்கள் என்பதை அறிந்து கொள்வோம். இவை நம்தமிழை வளம்படுத்தின. அழகூட்டின. நம் மொழிக்குப் பெருமை சேர்த்தன. பிறமொழியினரைப் பிரமிக்கவைத்தன.

காதலும் வீரமும் போற்றிய சங்கஇலக்கியங்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். திருக்குறளை முதலாகக் கொண்ட நீதிநூல்கள் பதினெட்டும் சங்கமருவிய காலத்துக்குரியவை என்பர். பக்திச்சுவை சொட்டும் திருமுறைகளும் திவ்வியப்பிரபந்தமும் பல்லவர்காலத்தவை. அதுமட்டுமா? விருத்தப்பாவில் உயர் கம்பனின் இராமாயணம், வெண்பாவிற் புகழேந்தி பாடிய நளவெண்பா, செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி, ஒட்டக்கூத்தரின் மூவருலா, சேக்கிழாரின் பெரியபுராணம், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி யாவும் காப்பிய காலமான சோழர்காலத்தில் எழுந்தவை என்பதை நாம் அறியவேண்டும்.

வித்துவச்செருக்குடன் அடுக்குமொழிகூட்டிச் சொல்லழகுகாட்டி நின்ற தனிப்பாடல்கள் நாயக்கர்காலத்தில் உதித்தவை. தமிழில் வசனநடை இலக்கியங்களும் பள்ளு குறவஞ்சி போன்ற பிரபந்தங்களும் புதிய கவிதை மரபும் பரிணமிக்க வழிவிட்டது ஐரோப்பியர் காலமாகும்.

சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, திறனாய்வு, மேடைப்பேச்சு எனத் தமிழ் வளர்ந்தது 20ஆம் நூற்றாண்டிலே எனலாம்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டுக் கணினி யுகத்திலும் தன்னை வளர்தெடுத்து, புலம்பெயர் இலக்கியத்தினால் மெருகு பெற்றுக் கன்னித்தமிழாகவே நிற்கிறது நம்மொழி.

நம் தமிழின் பெரும்புதையலை நாம் அறிவோம். சிலவற்றையாவது கற்றுச்சுவைப்போம். பேணுவோம். அடுத்த தலைமுறைக்குக் கையளித்துக் காப்போம்.

நன்றி வணக்கம்